**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 11 December 2021

# கொவிட்–19: சிறுவர்களின் நோயெதிர்ப்பாற்றல் குறித்த ஆய்வு

சிறுவர்களின் உடல்களில் கொவிட்–19 கிருமித்தொற்றை எதிர்க்கும் சக்தியை அறிய தேசிய பல்கலைக்கழகத்தின் யோங் லூ லின் மருத்துவப் பள்ளி ஓராண்டுக்கு ஆய்வு நடத்தவிருப்பதாக ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் அறிகிறது. இதன் தொடர்பிலான ஆய்வு ஒன்றை யோங் லூ லின் மருத்துவப் பள்ளி உருவாக்கிவருவதாக அதன் சிறுவர் மருத்துவப் பிரிவுக்கான துணை பேராசிரியர் எலிசபெத் தாம் ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸிடம் தெரிவித்தார்.

சிறுவர்களிடையே தடுப்பூசிகள் எவ்வளவு தூரம் வேலை செய்கின்றன, அவர்களுக்குக் கிருமித்தொற்று ஏற்பட்டுள்ளதற்கான அறிகுறிகள் இல்லாதபோதும் அதை எப்படி அடையாளம் காண்பது போன்றவற்றை ஆயராய இப்பள்ளி ஆய்வுக்கு 460 பங்கேற்பாளர்களை நியமிக்கத் திட்டமிட்டுள்ளது. பங்கேற்பாளர்கள் ஐந்து வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்டிருப்பர்.

இந்த முயற்சிக்குக் காரணம், சிறுவர்களிடையே தடுப்பூசிகள் இயங்கும் விதம் பெரியவர்களிடையே காணப்படுவதைப் போல் அல்லாமல் மாறுபடுகிறது. தடுப்பூசி போட்டுக்கொள்ளும் எண்ணம் உள்ள சிறுவர்கள், இல்லாதோர் ஆகிய இரு தரப்பபினரும் ஆய்வில் கலந்துகொள்ளலாம். ஆய்வில் பங்கேற்கும் சிறாரின் உடல் எடை15 கிலோவுக்கு மேல் இருக்கவேண்டும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.